*செல்லுகையில் அவர்களுக்காக ஜெபிக்கின்றேன். ஜெபம் என்பது ஒரு பிரசங்கியாருடைய ஊழியத்தின் மையமாகவும் முன்னுரிமையாகவும் இருக்க வேண்டும். மோசே இஸ்ரவேலுக்காக ஜெபித்தார். பவுல் சபைகளுக் காக ஜெபித்தார். சாமுவேல், "நானும் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பேனாகில் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனா யிருப்பேன்; அது எனக்குத் தூரமாயிருப்பதாக; நன்மையும் செவ்வையுமான வழியை நான் உங்களுக்குப் போதிப்பேன்" (1 சாமு. 12:23) என்று கூறினார்.*

*சில வேளைகளில் பிரசங்கியார்கள் தீர்க்கதரிசிகளைப் போல் இருக்க வேண்டும் - நாம் தேவனுடைய வசனத்தை முழங்குகின்றோம் - என்பதை ஏராளமான மக்கள் அறிகின்றார்கள். சில வேளைகளில் பிரசங்கியார்கள் ஆசாரியர்களைப் போல் இருக்கின்றார்கள் - நாம் மந்தையின் சார்பாகத் தேவனிடத்தில் கதறுகின்றோம் - என்பதை ஏராளமானவர்கள் மறக்கின்றார் கள். பிரசங்கியார்கள் தீர்க்கதரிசிகளைப் போல் இருப்பதற்கு முன்பு, அவர்கள் முதலில் ஆசாரியர்களைப் போல் இருக்க வேண்டும். நாம் செம்மறி ஆடுகளுக்காக - மற்றும் வெள்ளாடுகளுக்காகவும் - ஜெபிக்க வேண்டும்! தேவனுடைய பிரசங்கியார் பரிசுத்தமானவராக இருக்க வேண்டும். இது சபைக்கான அவரது முதல் பொறுப்பாக உள்ளது. அவர் (பண்பில்) தேவனுடைய மனிதராக இருக்க வேண்டும். ஜெபமே அவரது மிக முக்கியமான பணியாக உள்ளது. பின்பு சபையானது தேவனுடைய மனிதரிடமிருந்து தேவனுடைய செய்தியைக் கேட்கும்.*

*உணர்வுகள்'' என்பவை எப்போதுமே நம்மைத் தோல்வி அடையச் செய்கின்றன. எல்லா உறவுகளிலும், நேர்மை என்பதே அஸ்திபாரமாக இருந்துள்ளது. நாம் நேர்மையாக இருக்க மறுக்கின்றபோது ஜெபம் தோல்வியடைகிறது.*

*(2) ஊக்கம். "அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்; அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளி களாய்த் தரையிலே விழுந்தது" (லூக். 22:44). இயேசு இரண்டாவது, மற்றும் மூன்றாவது முறையாகக் கூட ... ஊக்கத்துடன் ஜெபித்தார்! பவுல், நாம் ஒன்றுகூடி ஜெபத்தில் போராட வேண்டும் என்று நமக்குக் கூறினார் (ரோமர் 15:32). ஜெபம் என்பது வேலையாக - கடினமான வேலையாக இருக்கிறது. ''நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" (யாக். 5:16). யாக்கோபு 5:16ல் உள்ள "நீதிமான்" என்பது பன்மைப் பெயர்ச் சொல்லாக இல்லாமல், ஒருமைப் பெயர்ச் சொல்லாக உள்ளதைக் கவனியுங்கள்.*

*(3) அர்ப்பணியுங்கள். இயேசு மரணம் வரையிலும்கூட வியாகுலத்தில் இருந்தார். இயேசு, "முகங்குப்புற விழுந்தார்" என்று மத்தேயு கூறினார் (மத். 26:39). "அவர் முழங்கால்படியிட்டு" என்று லூக்கா கூறினார் (லூக். 22:41). கிறிஸ்து தம்மைத் தாழ்த்தினார், ஜெபத்தில் தம்மையே அர்ப்பணித்தார். உடல் அமைவு என்பது ஜெபமாக இருப்பது இல்லை, ஆனால் ஜெபத்தில் உடல் அமைவு[ம்] அடங்குகிறது! நாம் தாழ்மைக்காக ஜெபிப்பது இல்லை; நாம் நம்மைத் தாழ்த்துகின்றோம். சுயத்தை வெறுமையாக்குதல், சுயத்தைக் கைவிடுதல் என்பது உள்ளது, சுயத்தைத் துறக்கும் ஜெப[மு]ம் உள்ளது. இயேசுவின் தனிச்சிறந்த உவமையான லூக்கா 18:9-14ல், ஆயக்காரன் தனது மார்பில் அடித்துக்கொண்டு, "தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையா யிரும்'' என்று கூறினான். உயர்த்துகின்றவர்கள் தாழ்த்தப்படுவார்கள், தாழ்மையானவர்கள் உயர்த்தப்படுவார்கள். மாபெரும் பியானோ இசைக் கலைஞர் ஒருவர், பீத்தோவன் அவர்களின் பியானோவை இசைக்கும்படி அழைக்கப்பட்டார். அவர், "நான் அதற்குத் தகுதியானவன் அல்ல'' என்று மறுத்தார். உண்மையிலேயே மாபெரும் மனிதர்கள் யாவரும் தாழ்மையான வர்களாகவே இருக்கின்றார்கள். மாற்றப்பட்டு இருத்தல் என்பது அர்ப்பணித்து இருத்தல் என்பதாகவே உள்ளது.*

*(4) விடாமுயற்சி (கெஞ்சிக் கேட்டல்). இயேசு ஒரே ஜெபத்தை மூன்று முறைகள் ஜெபித்தார், ஆயினும் ஒருபோதும், அவர் தமது விசுவாசத்தைக் கைவிடாதிருந்தார். அவர் தமது சீஷர்கள் உறங்கிக் கொண்டிருந்ததை மூன்றுமுறைகள் கண்ணுற்றார், ஆயினும் ஒருபோதும், அவர்களை மன்னிப்பதை அவர் விடாதிருந்தார். அநீதியுள்ள நியாயாதிபதியைப் பற்றி நகைச்சுவையான உவமையொன்றை இயேசு போதித்தார் (லூக். 18:1-8). ஒரு விதவை "[அவனை] எப்பொழுதும் தொந்தரவு செய்தபடியினால்" (வ. 5) அவளுடைய விருப்பத்தின்படி அவன் அவளுக்குச் செய்தான். இந்த நியாயாதிபதி, தேவனுக்குப் பயப்படடதில்லை அல்லது மனிதரை மதிக்க வும் இல்லை. நாம் மயங்கி (வெளியேறி) விடக் கூடாது, ஆனால் ஜெபிக்க வேண்டும் என்று இயேசு கூறினார். இந்த உவமை தேவனைப் பற்றிய*

*செய்வார் என்பதாகவும் உள்ளது. ஆகையால், விசுவாசம் என்பது இந்த பூமியில் மிகவும் நடைமுறைக்கு உகந்த விஷயமாக உள்ளது. சீஷர்கள் விசுவாசித்தார்கள் - பின்பு அவர்கள் இணங்க வைக்கப்பட்டார்கள்! நாம் விசுவாசிப்பதற்கு முன்னதாகவே இணங்க வைக்கப்பட விரும்புகின்றோம்!*

*பின்வருவதை எனக்கு விளக்கப்படுத்துங்கள்: இந்தியர்களில் ஏராளமானவர்கள் ஜெபிக்கின்றார்கள், இருப்பினும் ஒரு சிலரே சபைக்குச் செல்லுகின்றார்கள், மற்றும் வெகு சிலரே வேதாகமத்தை வாசிக்கின்றார் கள். தாங்கள் விசுவாசிக்காத, கவனிக்க விரும்பாத ஒரு தேவனிடத்தில் இந்தியர்கள் ஏன் ஜெபிக்கின்றார்கள்? அதற்குப் பதில் கூறுங்கள்! ஜெபம் என்பது உலகளாவிய ஒரு கடைசிப் புகலிடமாக உள்ளது ... [இதில்] ஒருவர் எதையும் இழக்கத் தேவையில்லை. இந்த வகையான ஜெபம் நம்மை, தேவனைக் கொண்டிராமல் தேவபக்தியுள்ளவர்களாய் இருக்கும்படி அனு மதிக்கிறது. மேலும் பின்வருவது பற்றியும் சிந்தித்துப் பாருங்கள்: ஜெபத்தைப் பற்றி ஒரு புத்தகத்தையும் கூட எழுதியுள்ள இறையியல் அறிஞர் ஒருவர், "கீழே ஆழத்தில், நான் ஜெபத்தில் நம்பிக்கை வைப்பது இல்லை" என்று நேர்மையாக அறிக்கையிட்டார். நீங்கள்? ஆழமாக? இந்த இறையியல் அறிஞர் "ஜெபிக்கத் தொடங்குவதாக" அந்த நாளில் ஆணை யிட்டார். ஆராய வேண்டாம், தத்துவமாக்க வேண்டாம், கோட்பாடாக்க வேண்டாம் ... ஜெபியுங்கள்! நீங்கள் ஜெபிப்பதினால் மட்டுமே ஜெபிக்கக் கற்றுக் கொள்ளுகின்றீர்கள்.*

*மிகவும் அடிக்கடி கேட்கப்படுகிற ஒலிக்குறிப்புகள் ''எதுவும் உதவுவதில்லை ... நான் ஜெபத்தையும் கூட முயற்சி செய்தேன், அது உதவ வில்லை." இது ஜெபமல்ல ஆனால், நிபந்தனையின் பேரில் சரணடைதலாக உள்ளது. "உமது சித்தம் செய்யப்படுவதாக" என்பது வசன ரீதியானதாக உள்ளது, இருப்பினும் அது ஒரு சாக்குப்போக்காகவும் இருக்கலாம்! அது செய்யப்படும் என்று நாம் விசுவாசியாவிட்டால், நாம் தேவனுக்கு (மற்றும் ஜெபத்திற்கு) ஒரு தப்பும் போக்கைக் கொடுக்கின்றோம்! இந்த அவிசுவாச மானது "நீர் செய்வீர் என்று நான் விசுவாசிக்கவில்லை" என்று அமைதியாகக் கூறுவதின் மூலம் தேவனுடைய இராஜரீகத்தைச் சந்தேகப்படுகிறது.*

*(7) "உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக." "... ஆயினும் என்னு டைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" (லூக். 22:42) என்று இயேசு ஜெபித்தார். மாதிரி ஜெபத்தில் இயேசு, ''உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று கூறினார் (மத். 6:10). 1 யோவான் 5:14, 15, "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறா ரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவை களைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்'' என்று கூறுகிறது. எவ்வாறு ஜெபிப்பது என்று மனிதன் அறிவதில்லை. ரோமர் 8:26, ''அந்தப்படியே, ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று*